எண்.51-1/KM/Rev/e-auction/2024-25
காரைக்கால் நகராட்சி
காரைக்கால்
*****

காரைக்கால் தேதி:09.02.2024

# ஏல அறிவிப்பு

## மின்னணு இணையதள ஏலம் (e-auction)

இதனால் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில் காரைக்கால் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் காரைக்கால் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட ஏல நிபந்தனைகளின்படி மின்னணு ஏல முறையில் (e-auction) இணையதளம் மூலம் **எதிர்வரும் 16-02-2024 தேதி மதியம் 03.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை ஏலம் நடைபெறும்**. மேலும் ஏலம் விடப்படும் இனங்களின் விபரம், விண்ணப்பத் தொகை, பிணைத்தொகை, ஏல நிர்ணயத் தொகை, ஏலத்திற்கான கேள்வித் தொகை ஆகியவற்றினை **https://eauction.gov.in** என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ஏலம் கேட்க விருப்பமுடையவர்கள் விண்ணப்பபடிவம், குத்தகை இனங்கள் மற்றும் ஏலநிபந்தனைகளை https//eauction.gov.in என்ற இணையதள முகவரியில் **16-02-2024 காலை 10.00** மணிவரை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விண்ணப்பங்கள் **https://eauction.gov.in** என்ற இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட **Digital Key**-ஐ உபயோகித்து இந்த ஏலத்தில் பங்குபெற வேண்டும். மேலும் இணைய தளத்தை உபயோகிப்பதில் ஏதேனும் வழிகாட்டுதல் தேவைப்பட்டால் 0413 – 2220225 **& 1800 233 7315 (Toll Free)** என்ற தொலைபேசி எண்ணில் அல்லது காரைக்கால் நகராட்சி அலுவலக எண்களான 9976051227 மற்றும் 9942145845-ஐ அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

P. [signature]
ஆணையர்
காரைக்கால் நகராட்சி

Scanned with OKEN Scanner
Scanned with OKEN Scanner

காரைக்கால் நகராட்சி
காரைக்கால்
******

# இணைப்பு

**குத்தகை காலம் 01.04.2024 முதல் 31.03.2025 (1 வருடம் மட்டும்)**

| வ. எண் | இணங்களின் விபரம் | விண்ணப்பத் தொகை GST 5% | முன் வைப்புத் தொகை (EMD) | ஏலநிர்ணய தொகை | ஏலத்திற்கான கேள்வி தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | நெடுங்காடு கொம்யூன் கோட்டகம் கிராமம் 1 வேலி 5 மா 3 ஏ 10ஆர் 50சா.ஆர் சர்வே எண்: 53/3, 54/1, 55/4, 55/9, 59/2, 63/4, 71/3, 39/3 | 1,050/- | 10,000/- | 69,480/- | 1,000/- மடங்கில் |
| 2. | மதகடி மார்க்கெட் காய்கறி விற்பனை அடிக்காசு வசூல் | 1,050/- | 10,000/- | 66,480/- | 1,000/- மடங்கில் |
| 3. | ஆடு, மாடு அறுவை செய்யும் இடம் கட்டண வசூல் | 1,050/- | 10,000/- | 1,91,160/- | 1,000/- மடங்கில |
| 4. | புதிய பேருந்து நிலைய கிழக்குப் பகுதி இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடம் கட்டண வசூல். | 1,050/- | 10,000/- | 8,26,200/- | 1,000/- மடங்கில் |
| 5. | புதிய பேருந்து நிலைய மேற்கு பகுதி இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடம் கட்டணவசூல். | 1,050/- | 10,000/- | 5,45,160/- | 1,000/- மடங்கில் |
| 6. | புதிய பேருந்து நிலைய ஆட்டோ நிறுத்துமிடம் கட்டண வசூல் | 1,050/- | 10,000/- | 1,38,840/- | 1,000/- மடங்கில் |
| 7. | புதிய பேருந்து நிலைய கிழக்குப் பகுதி கட்டண கழிப்பிட வசூல் | 1,050/- | 10,000/- | 10,83,480/- | 1,000/- மடங்கில் |
| 8. | வாரசந்தை அடிகாசு வசூல், புதிய சந்தை திடல் | 1,050/- | 10,000/- | 22,03,560/- | 1,000/- மடங்கில் |
| 9. | புதிய சந்தைத்திடல் வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டண வசூல். | 1,050/- | 10,000/- | 57,120/- | 1,000/- மடங்கில் |
| 10. | புதிய நேரு மார்க்கெட் கோழி விற்பனை அடிக்காசு வசூல் | 1,050/- | 10,000/- | 65,280/- | 1,000/- மடங்கில் |

Scanned with OKEN Scanner
Scanned with OKEN Scanner

| வ. எண் | இனங்களின் விபரம் | விண்ணப்பத் தொகை GST 5% | முன் வைப்புத் தொகை (EMD) | ஏலநிர்ணய தொகை | ஏலத்திற்கான கேள்வி தொகை |
|---|---|---|---|---|---|
| 11. | புதிய நேரு மார்க்கெட் ஆட்டு உறுப்புகள் சுத்தம் செய்யும் குத்தகை வசூல் | 1,050/- | 5,000/- | 14,400/- | 1,000/- மடங்கில் |
| 12. | புதிய நேரு மார்க்கெட் கட்டண கழிப்பிட வசூல் | 1,050/- | 10,000/- | 83,040/- | 1,000/- மடங்கில் |
| 13. | புதிய பேருந்து நிலைய வண்டிப்பேட்டை கட்டண வசூல் | 1,050/- | 10,000/- | 5,40,960/- | 1,000/- மடங்கில் |
| 14. | வாரசந்தை கட்டண கழிப்பிட வசூல் | 1,050/- | 10,000/- | 66,930/- | 1,000/- மடங்கில் |
| 15. | புதிய நேரு மார்க்கெட் மீன் சுத்தம் செய்யும் குத்தகை வசூல் | 1,050/- | 5,000/- | 12,410/- | 1,000/- மடங்கில் |
| 16. | இரவு நேர பெண்கள் தங்கும் கூடம் பங்கேற்பு: காரைக்கால் நகராட்சி மகளிர் சுய உதவி குழுக்கள் மட்டும். | 1,050/- | 10,000/- | 72,600/- | 1,000/- மடங்கில் |
| 17. | காரைக்கால் கடற்கரை மேற்கு பகுதி கட்டண கழிப்பிட வசூல் | 1,050/- | 5,000/- | 47,800/- | 1,000/- மடங்கில் |
| 18. | புதிய பேருந்து நிலையம் APE ஆட்டோ நிறுத்துமிடம் கட்டண வசூல் | 1,050/- | 10,000/- | 80,940/- | 1,000/- மடங்கில் |
| 19. | காரைக்கால் கடற்கரை கிழக்கு பகுதி கட்டண கழிப்பிட வசூல் | 1,050/- | 10,000/- | 1,02,960/- | 1,000/- மடங்கில் |
| 20. | காரைக்கால் கடற்கரையில் சிறு கடைகள் மற்றும் தள்ளுவண்டிகள் நடத்துவதற்கு | 1,050/- | 10,000/- | 2,42,120/- | 1,000/- மடங்கில் |

Scanned with OKEN Scanner
Scanned with OKEN Scanner

| வ. எண் | இனங்களின் விபரம் | விண்ணப்பத் தொகை GST 5% | முன் வைப்புத் தொகை (EMD) | ஏலநிர்ணய தொகை | ஏலத்திற்கான கேள்வி தொகை |
|---|---|---|---|---|---|
| 21. | காரைக்கால் புதிய பேருந்து நிலைய பெட்டி கடை | 1,050/- | 10,000/- | 2,42,550/- | 500/- மடங்கில் |
| 22. | காரைக்கால், புதிய பேருந்து நிலைய உட்பகுதி வர்த்தக விளம்பர தொலைக்காட்சி 4 பெட்டிகள் | 1,050/- | 10,000/- | 2,42,160/- | 1,000/- மடங்கில் |
| 23 | புதிய நேருமார்க்கெட் மீன் மற்றும் உலர் மீன்கள் அடிக்காசு வசூல் | 1,050/- | 10,000/- | 6,60,000/- | 1,000/- மடங்கில் |
| 24. | மதகடி மார்க்கெட் மீன் மற்றும் உலர் மீன்கள் அடிக்காசு வசூல் | 1,050/- | 10,000/- | 1,10,000/- | 1,000/- மடங்கில் |
| 25. | கீழகாசாக்குடி மார்க்கெட் மீன் மற்றும் உலர் மீன்கள் அடிக்காசு வசூல் | 1,050/- | 10,000/- | 1,10,000/- | 1,000/- மடங்கில் |
| 26. | காமராஜர் திடல் கட்டண கழிப்பிட வசூல் | 1,050/- | 5,000/- | 13,750/- | 1,000/- மடங்கில் |

P. [signature]

ஆணையர்

காரைக்கால் நகராட்சி

Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner

காரைக்கால் நகராட்சி
காரைக்கால்

**எதிர்வரும் 16.02.2024 அன்று e-auction இணையதளம் மூலம் ஏலம் விடப்படும் காரைக்கால் நகராட்சிக்கு சொந்தமான 26 குத்தகை இனங்களுக்கான**

<u>நிபந்தனைகள்/ விதிமுறைகள்</u>

1. குத்தகை உரிமைகள் அனைத்தும் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகள், நகராட்சி சட்டங்கள் இவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் துணை விதிகள் ஆகியவைகளுக்கும் மேலும் இனி ஏற்படுத்தப்படும் விதிகளுக்கும் கட்டுப்பட்டவையாகும்.

2. அதிகபட்ச தொகை கோரும் ஏலதாரருக்கு ஏலம் சட்டவிதிகளுக்கு உட்பட்டு உறுதி செய்யப்படும்.

3. ஏலம் கேட்க விருப்பமுடையவர்கள் ஏல விண்ணப்பத்துடன், ஏல விண்ணப்பத் தொகை ரு.1.050/- (GST உட்பட) வரைவோலையாகவும் (Demand Draft) மற்றும் பிணைத் தொகையை (EMD) இணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி ரு.10,000/- அல்லது ரு.5,000/-த்தை நிரந்தர வைப்புத் தொகை ரசீதாகவும் (Fixed Deposit Receipt) "**COMMISSIONER, KARAIKAL MUNICIPALITY**" என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் எடுத்து இணைத்து காரைக்கால் நகராட்சி ஆணையர் அறையில் உள்ள பெட்டியில் 16.02.2024 அன்று காலை 10.00 மணிக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். மேலும் இந்த ஆவணங்களை நகல் எடுத்து www.eauction.gov.in என்ற இணையதளத்திலும் மேற்குறிப்பிட்ட காலகெடுவிற்குள் பதிவேற்றம் செய்யவேண்டும்.

4. ஏலம் கேட்க விரும்புவோர் தங்களது பெயரில் எந்தவித வரி பாக்கி இல்லை (No Due Certificate) எனும் சான்றிதழை காரைக்கால் நகராட்சி வருவாய் பிரிவில் முன்னதாக பெற்று அதனை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

5. ஏலத்தில் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்பட்டவர் ஏலம் எடுத்தத் தொகை மற்றும் அதற்குண்டான GST 18% தொகை முழுவதையும் நகராட்சி வருவாய் பிரிவில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவோ அல்லது COMMISSIONER, KARAIKAL MUNICIPALITY, AXIS BANK, காரைக்கால் கிளை Savings Bank A/C No.917020066512049 மற்றும் IFSC CODE: UTIB0001568 என்ற வங்கி கணக்கிலோ ஏலம் நடைபெற்ற மறுநாள் 17.02.2024 அன்று மதியம் 12.00 மணிக்குள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் அடுத்தப்படியாக அதிக ஏலத்தொகை கேட்பவருக்கு ஏலம் உறுதி செய்யப்படுவதுடன், முன்னவரின் பிணைத் தொகை பறிமுதல் செய்யப்படும். மேலும், எதிர்வரும் காலங்களில் நகராட்சியால் நடத்தப்படும் எந்த ஏலங்களிலும் கலந்து கொள்ள முடியாது. இதே நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்படும்.

6. ஏலம் எடுத்தவர் சம்பந்தப்பட்ட இனத்தை நகராட்சியின் ஏல நிபந்தனைப்படியும், நகராட்சியின் சட்ட விதிகளுக்கு உட்பட்டும் நடத்தி வர வேண்டும். நிபந்தனைகளை / சட்ட விதிகளை மீறி நடப்பதாக புகார் பெறப்பட்டாலோ அல்லது நேரில் ஆய்வு செய்யப்பட்டு கண்டறியப்பட்டாலோ, மேற்படி இனத்தின் குத்தகை உரிமம் எந்தவித முன் அறிவிப்புமின்றி உடனடியாக ரத்து செய்யப்படும். மேலும் கட்டிய தொகை முழுவதும் நகராட்சியின் கணக்கில் வரவு வைப்பதோடு, கட்டிய தொகை முழுவதையுமோ அல்லது விகிதாச்சாரப்படியோ, எக்காரணத்தைக் கொண்டும் திருப்பியளிக்கப்படமாட்டாது என்பதோடு, மேற்படி குத்தகை இனத்தை மறு ஏலத்தில் வேறொருவருக்கு விடப்படும் அல்லது நகராட்சியே தன் வசத்தில் எடுத்து கொள்ளும். இதில் காரைக்கால் நகராட்சி ஆணையர் அவர்களின் முடிவே இறுதியானது.

Scanned with OKEN Scanner
Scanned with OKEN Scanner

7. ஏலம் உறுதி செய்யப்படாத ஏலதாரர்களின் பிணைத் தொகை ஏலம் முடிந்த 5 நாட்களுக்கு பிறகு திருப்பி தரப்படும். ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் எடுத்தவரின் வைப்புத்தொகை (FDR) ஏலக்காலக்கெடு முடிவடைந்த பின்னரே திரும்பத் தரப்படும்.

8. காரைக்கால், கடற்கரையில் சிறு கடைகள் மற்றும் தள்ளுவண்டிகள் வசூல் இனத்திற்கு மட்டும் குறைந்தபட்ச ஏலத்தொகையாக வருடத்திற்கு ரூ.2,42,120/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏலத்தொகையிலிருந்து 10% அதாவது ரூ.2,66,330/- வரை ஏலம் கோரலாம். ஒன்றுக்கும் மேற்பட்ட ஏலதாரர்கள் 10% கூடுதல் தொகை மற்றும் அதற்கும் மேல் கூடுதலாக ஏலம் கேட்கும் பட்சத்தில், கூடுதலாக ஏலம் கேட்ட அனைத்து ஏலதாரர்களின் பெயர்களையும் சீட்டில் எழுதிப்போட்டு, ஏலம் நடைபெற்ற மறுநாள் (அலுவலக நாள்) காலை 11.00 மணிக்கு குலுக்கள் முறையில் ஏலதாரர் தேர்வு செய்யப்படுவார்.

9. எக்காரணத்தைக் கொண்டும் தனக்கு ஒதுக்கப்பட்ட குத்தகை உரிமையை வேறு ஒருவருக்கு உள் ஒதுக்கீடு செய்து கொடுக்கவோ அல்லது மறைமுகமான பயனை அடைவதோ கூடாது.

10. ஏலத்தை காரணம் காட்டாமல் ஒத்திவைக்கவோ, நிறுத்திவைக்கவோ, ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

11. இக்குத்தகை சம்பந்தமாக மற்ற அரசு துறைகளின் அனுமதி ஏதேனும் பெற வேண்டுமாயின் குத்தகைதாரர் தனது பொறுப்பில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

12. ஏலதாரர் பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ளபடி ஆரம்ப ஏலத் தொகைக்கு மேற்கொண்டு தங்கள் ஏலத் தொகையை குத்தகை இடங்களில் கண்டுள்ளபடி ஏலம் ரூ.1,000/- ன் மடங்கில் கேட்கப்பட வேண்டும்.

13. ஏலம் தொடர்பான தகவல் பரிமாற்றத்திற்கு ஏலம் கேட்பவர்கள் தங்களது இருப்பிட முகவரி, ஆதார் எண் மற்றும் தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

14. முழுமையாக மற்றும் தெளிவாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களோ, தவறான மற்றும் உண்மைக்கு புறம்பான தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் ஆணையர் அவர்களால் நிராகரிக்கப்படும். இதில் யாதொரு உரிமைகோரவோ, நீதிமன்ற சட்ட நடவடிக்கைகள் நாட அனுமதிக்க இயலாது.

15. ஏல விண்ணப்ப தொகை ரூ.1050/- திருப்பி அளிக்கப்படமாட்டாது.

P. L

ஆணையர்
காரைக்கால் நகராட்சி

Scanned with OKEN Scanner
Scanned with OKEN Scanner